Children's Theatre

*260 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை கவர்ன்மெண்டு எஸ்டேட்டில் பழைய அசெம்பிளி கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கும் குழந்தைகள் சினிமா தியேட்டருக்காகவும், சினிமா சம்பந்தப்பட்ட கருவிகள் இதர சாமான்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) 1958-ம் வருட கடைசி வரைக்கும் இந்த சினிமா தியேட்டரில் எத்தனை படங்கள் காட்டப்பட்டன ?

(இ) எத்தனை நாட்கள் படங்கள் காட்டப்பட்டன ?

(ஈ) வசூலான தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

(அ) ரூ. 73,291·53.
(ஆ) 68 படங்கள்.
(இ) 72 நாட்கள்.
(ஈ) ரூ. 3,470·79.

SRI P. G. MANICKAM : சினிமா தியேட்டரில் காட்டப்பட்ட படங்கள் யாரால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன? நமது அரசாங்கம் எத்தனை படங்கள் தயாரித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நாம் தனியாக படம் தயாரிக்கவில்லை. மற்றவர்கள் தயாரிக்கும் படங்களை எடுத்துக் காட்டுகிறோம் ; 68 படங்கள் சென்ற ஆண்டில் காட்டப்பட்டிருக்கின்றன.

SRI A. VEDARATHNAM : இந்தப் படங்களை, மொபஸலிலே இதர ஜில்லாக்களிலுள்ள இளம் சிறுர்களுக்கும் பலன் கிடைக்கும்படியாகச் செய்து, மற்ற இடங்களுக்கும் அனுப்ப அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது சென்னை நகரில் ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை வைத்துக்கொண்டு, ஜில்லாப் பிரதேசங்களுக்கும் இதை விஸ்தரிப்பதற்கும் முயற்சி செய்யப்படும்.

SRI V. SANKARAN : குழந்தைகளுக்கான படங்களைக் குழந்தைகள் மட்டும்தான் பார்க்கவேண்டுமா ? பெரியவர்கள் பார்க்க வேண்டுமென்றால், அவர்களும் அனுமதிக்கப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பெரியவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் இரட்டை சார்ஜ் கட்டவேண்டும்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION *RE* ALLEGED DEVIOUS TACTICS OF THE MANAGEMENT OF THE INDIAN EXPRESS NEWSPAPERS, LIMITED, AND CONSEQUENT LABOUR UNREST.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member, Sri K. Sattanatha Karayalar, to discuss a definite matter of urgent public importance, viz., the serious impasse created by the devious tactics of the management of the Indian Express Newspapers, Ltd., and the consequent labour unrest, while is assuming alarming proportion.

29th April 1959] [Mr. Speaker]

Before going into the matter, I should like to know from the Hon. Minister, whether the Government have any responsibility in this matter.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, obviously the Government have no responsibility when people go on strike. Our responsibility is only to bring about a settlement. We are not responsible for people going on strike.

MR. SPEAKER : Obviously this matter cannot be discussed and therefore, I rule it out of order.

III.—ANNOUNCEMENT *RE* AMENDMENTS TO ASSEMBLY RULES.

MR. SPEAKER : I have to announce that I have signed the amendments to the Madras Assembly Rules as approved by the House, and that they will come into force with immediate effect. The amendments will be published in the *Fort St. George Gazette* in due course.

IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS BILL, 1959 (L.A. BILL NO. 7 OF 1959)—*cont.*

MR. SPEAKER : We shall continue the discussion on the Madras Hindu Religious and Charitable Endowments Bill, 1959. 2 p.m.
May I know how long will the Hon. Minister take for his reply?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : About 30 or 35 minutes.

MR. SPEAKER : Then I allow ten minutes each for two hon. Members and fifteen minutes for the hon. the Leader of the Opposition. Now the hon. Member, Sri Sampath, will speak.

* SRI T. SAMPATH : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தின் பேரில் நான் இரண்டொரு ல்ல ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவினுடைய பிரிவுகளை எடுத்துக்கொண்டு அது சம்பந்தமான கருத்துக்களை சொல்வதற்கு முன்பாக ஒரு சிறு குறையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவில் அநேகமாக 120 பிரிவுகள் இருக்கின்றன. இந்த பிரிவுகளையெல்லாம் எளிதில் புரிந்துகொள்ள சிரமமாக இருக்கிறது. என்னைப்போலுள்ள வழக்கறிஞர்களுக்குக்கூட சுலபமாக புரிந்துகொள்வதற்கு கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. இதற்கு பொருள் அடக்கம் அதாவது கன்டென்ட்ஸ் (contents) என்று சொல்லுவார்களே அது போன்று கொடுத்திருந்தால் ஓரளவு புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். இனிமேலாவது இது போன்ற பெரிய மசோதாக்களைக் கொண்டுவந்தால் அம்மாதிரியான பொருள் அடக்கம் கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.